முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 207/2017

வாதி தரப்பு சாட்சி-2 வைரமுத்து **திருமதி.ஏ.பிரேமா** பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதற்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும் என தாக்கல் செய்துள்ளோம். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்தது என்றால் நான் தான் சொன்னேன். 2 ம் பிரதிவாதி எனது தாய் மாமா. எனது தந்தை கடந்த 07.03.1977 ம் தேதி சர்வே எண்.134/1 ல் 6 ஏக்கர் நிலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் தற்போது உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 01.06.2000 ம் தேதி எனது தந்தை, தாய் மற்றும் மற்ற வாதிகள் சேர்ந்து 2 ம் பிரதிவாதிக்கு ஏக்கர் 1.86 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி தேதியில் 2 ம் பிரதிவாதி மேற்படி ஏக்கர் 1.86 செண்ட் நிலத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

2. அவர் எவ்வாறு கிரையம் பெற்றார் என தெரியவில்லை. 2 ம் பிரதிவாதியின் பெயரில் தனியாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. வா.சா-ஆ.3 ஆவணத்தில் 2 ம் பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றால் அது எவ்வாறு சேர்க்கப்பட்டது என தெரியவில்லை. வா.சா.ஆ-8 ஆவணத்தில் 1977 முதல் 1986 வரை தான் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1986 ற்கு பின்னிட்டு வில்லங்க சான்றிதழ் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு எந்த சான்றிதழும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1986 ற்கு பிறகு வில்லங்க சான்றிதழ் ஏன் தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதேனும் உண்டா என்றால் என்வசம் உள்ளது வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறேன்.

3. அதை தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் இல்லை. எனது பெற்றோர் மற்றும் மற்ற வாதிகள் சேர்ந்து 2 ம் பிரதிவாதிக்கு 6 ஏக்கரில் 1.82 செண்ட் நிலத்தை தகுந்த மறுபயன் பெற்றுக்கொண்டு சட்டப்படி கிரையம் செய்து

கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் 2 ம் பிரதிவாதி கிரைய சொத்தை சுவாதீனம் பெற்று தனது பெயரில் பட்டா மாறுதல் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து விட்டு அவரிடமிருந்து துர்லாபம் அடைய வேண்டி பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதிக்கு கிரையம் பெற்ற சொத்தில் எனக்கோ, மற்ற வாதிகளுக்கோ எவ்வித உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு நாங்கள் தான் அவரின் சுவாதீனத்தில் இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்குரையில் உள்ள சொத்துவிவரம் தவறானது என்றால் சரியல்ல.

4. எத்தனை ஏக்கருக்கு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் 6 ஏக்கர் நிலத்திற்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கில் வழக்குமூலம் தவறானது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பட்டா செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரத்தை பெற இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியின் பதிலுரையில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். 2 ம் பிரதிவாதியின் பதிலுரைக்கு கூடுதல் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 01.06.2000 ம் தேதியில் 2 ம் பிரதிவாதி பெற்ற கிரையம் பற்றி எந்த மறுப்பும் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு எந்த மறுப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 01.06.2000 ம் தேதிய கிரைய ஆவணம் உண்மையானது என்றும், அதனால் தான் எனது பிரமாண வாக்குமூலத்தில் அதை மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5. 1986 ற்கு பிறகு உள்ள வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்தால் 2 ம் பிரதிவாதியின் கிரையம் தெரிந்து விடும் என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 10 ம் பத்தியில் 2 ம் பிரதிவாதி 7 ம் பிரதிவாதி மூலம் தாவா சொத்தில் தனது பெயரை பட்டாவில் சேர்த்து அதன் அடிப்படையில் தாவா சொத்து தங்களுக்கு பாத்தியம் என சட்ட விரோதமாக தாவா சொத்தில் நுழைய முயற்சி செய்வதாக கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. பட்டாவில் 2 ம் பிரதிவாதி தனது பெயரை சேர்த்தது சம்மந்தமாக மேல்நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். அது சம்மந்தமாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

6. நான் சொல்வது போல எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், ஆவணங்களை எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் உரிமையாளர் என விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தூய கரங்களுடன் அனுக வில்லை என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு 2ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**